வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 300/ஆ4/2021 நாள் 14.02.2021

பொருள் : வேலூர் மாவட்டம் – தேர்வுகள் –2020–2021ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை முதலாம் ஆண்டு Arrear / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – +2 பள்ளி மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணம் மற்றும் TML கட்டணம் – ஆன்லைன் வழியாக செலுத்துதல் – சார்பு.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.29, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள்: 01.08.2001.
2. அரசாணை எண் 237, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்: 21.09.2007.
3. அரசாணை (நிலை) எண்.53, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந2) துறை, நாள்: 09.07.2013.
4. அரசாணை (நிலை) எண்.14, பள்ளிக் கல்வித் (ஜிஇ1)த் துறை, நாள்.29.01.2018.
5. அரசாணை (நிலை) எண்.58, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (D.M.-IV) துறை, நாள்.22.01.2021.
6. சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண்.02644/எச்1/2020 நாள் 13.02.2021

*****

2020–2021–ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு தொடர்பான பெயர்ப்பட்டியல் தயாரிக்கவும், மாணவர்களை பள்ளிக்கு வரவழைத்து தேர்வுக்கட்டணம் பெறுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டு, மாணவர்கள் / மாணவர்களின் பெற்றோர்கள் பள்ளிக்கு வரும்பொழுது பின்பற்ற வேண்டிய நிலையான செயல்பாட்டு வழிமுறைகளை வெளியிட்டுள்ளது. எனவே, பார்வை 5–ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள நிலையான செயல்பாட்டு வழிமுறைகளைப் (SOP) பின்பற்றி, 2020–2021 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்

தேர்வெழுதவுள்ள பள்ளி மாணவர்களிடமிருந்து (தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களைத் தவிர்த்து) தேர்வுக்கட்டணத் தொகையினை பெற்று, <u>15.02.2021</u> முதல் <u>19.02.2021</u> வரையிலான நாட்களுக்குள், ஆன்லைன் வழியாக பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றி தேர்வுக்கட்டணத்தினை செலுத்துமாறு, அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| STEP 1 : | www.dge.tn.gov.in |
| STEP 2 : | Online Portal for School and Educational Offices |
| STEP 3 : | School Login (School User ID & Password) |
| STEP 4 : | Payment of HSC XII is live till 18 Feb2021 06.00.00<br>AND<br>TML Payment for HSC XII |
| STEP 5 : | Class Name : HSC - XII<br>HSC- XI ARREAR |

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு**

**தேர்வுக் கட்டணம்**

| வ.எண் | மாணவர் வகை | தேர்வுக் கட்டணம் | மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | சேவைக் கட்டணம் | மொத்தம் (ஒரு மாணவருக்கு) |
|---|---|---|---|---|---|
| 1 | செய்முறை கொண்ட பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.200/– | ரூ.20/– | ரூ.5/– | ரூ.225/– |
| 2 | செய்முறை இல்லாத பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.150/– | ரூ.20/– | ரூ.5/– | ரூ.175/– |

**தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியானோர்:**

| | |
|---|---|
| 1) | பார்வை 2–ல் காணும் அரசாணையின்படி தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு (Tamil Medium) தேர்வெழுதும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. |
| 2) | கண்பார்வையற்றோர், காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர் ஆகிய மூன்று வகை மாற்றுத் திறனாளி மாணவர்கள். |
| 3) | அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் SC, SCA, SS, ST, MBC/DCஇனத்தைச் சேர்ந்த மாணவர்கள் (தமிழ் வழி தவிர இதர பயிற்று மொழிகளில் (Other than Tamil Medium) பயில்பவராக இருந்தாலும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. |
| 4) | • பார்வை 3–ல் காணும் அரசாணையின்படி அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் BC, BCM இனத்தில் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு குறைவாக உள்ளவர்கள் (எந்த மொழி வாயிலாக பயின்றாலும் - Other than Tamil Medium) தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.<br>• அரசு உதவி பெறும் (Aided) / பகுதி அரசு உதவி பெறும் (Partly aided) பள்ளிகளில், சுயநிதி பாடத்தொகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்ட (வரிசை எண்.3 மற்றும் 4–ல் குறிப்பிட்டுள்ள) இந்தத் தேர்வுக் கட்டணவிலக்கு பொருந்தாது. |

**முக்கிய குறிப்பு:**

தேர்வுக்கட்டண விலக்கிற்கு தகுதியானவர்களில், செய்முறை கொண்ட பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோருக்கு மொத்தக் கட்டணமாக ரூ.225/– ற்கும், செய்முறை இல்லாத பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் ரூ.175/– ற்கும் முழுமையாக விலக்களிக்க வேண்டும்.

சுயநிதி / மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயின்று +2 பொதுத் தேர்வெழுதும் மாணவர்கள் தேர்வுக் கட்டண விலக்கு பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்.

**+1 Arrear மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணம் செலுத்துதல்**

பள்ளித் தலைமையாசிரியர்கள், தங்கள் பள்ளியில் +2 பயிலும் பள்ளி மாணவர்கள், மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களுக்கான தேர்வினை (+1 Arrear Subjects) தற்போது எழுதுவதற்கான தேர்வுக் கட்டணத் தொகையினை சம்பந்தப்பட்ட மாணவர்களிடமிருந்து பெற்று, அத்தொகையினை 15.02.2021 முதல் 19.02.2021 வரையிலான நாட்களில் சென்னை,

அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளமான www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, ஆன்–லைன் வழியாக செலுத்துதல் வேண்டும்.

**+1 Arrear தேர்வெழுதுவதற்கான கட்டணம்**

ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/– மற்றும் இதரக் கட்டணம் ரூ.35/– (c–ம்)

ஒரு பாடம் ரூ.50 + 35 = 85/– இரு பாடங்கள் = 135 (ரூ.100 + 35 = 135)

**அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் கட்டணம் (TML Fees)**

மேலும், 2020–2021 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வின் தேர்வு முடிவுகள் அடங்கிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) ஆன்லைன் மூலமாக (dge.tn.gov.in என்ற இணையதளம் வழியாக) பதிவிறக்கம் செய்து கொள்வதற்காக, அனைத்துப் பள்ளிகளும் (எந்த ஒரு பள்ளியும் விலக்கு இல்லாமல்) ரூ.300/– செலுத்த வேண்டும்.

ஆன்லைன் மூலமாக மேற்படி கட்டணங்கள் செலுத்துவது தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களுக்கு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் இயக்கக ஒருங்கிணைப்பாளரை (Co-ordinaters) தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களையும், 2020–2021–ஆம் கல்வியாண்டின் மேல்நிலை முதலாம் ஆண்டு Arrear / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான தேர்வுக் கட்டணம் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான (TML) கட்டணத்தினை ஆன்லைன் மூலமாக செலுத்திட அறிவுறுத்தப்படுகிறது.

**மேலும், அனைத்து அரசு உதவி பெறும் (Aided) / பகுதி அரசு உதவி பெறும் (Partly aided) பள்ளிகளில் உள்ள சுயநிதி பாடத்தொகுப்பு பற்றிய விவரங்களை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படும் படிவத்தின் படி பூர்த்தி செய்து 22.02.2021–க்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**இணைப்பு:** மேற்குறிப்பிட்ட படிவம்.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

**படிவம்**

# Aided / Self finance group details in the fully aided / partly aided schools

## Revenue District Name:

| Sl. No. | Educational District No. & Name | Type of school (Fully aided / Partly aided) | School No. (DGE Code) | School Name | Aided Group Codes | Self-finance Group codes |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**Head Master Signature**
**(With Seal)**